முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி
O.S.No. 388/2017

தேதி : 11–07–2025

(பி.வா.சா.1) – திருமதி.செல்வராணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நிருபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என் கணவர் எப்போது இறந்தார் என்றல் 23.08.2016. என் மாமனார் பெருமாள் செட்டியார் எப்போது இறந்தார் என்றால் 30.11.2017. வழக்கின் பிராது விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என் கணவர் என் மாமனாருக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் பள்ளத்து கால்வாய், பெரியூர் கிராமம். 8ம் பிரதிவாதிக்கு என் மாமனார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தினை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் மாமனாருக்குவழக்கு சொத்து பூர்வீகமாக காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எத்தனை ஆண்டாக பள்ளத்து கால்வாயில் வசிக்கிறேன் எ ன்றால் திருமணம் ஆனமுதல் சுமார் 40 ஆண்டாக. வாதி தன்னடைய தகப்பனாரிடம் பாகம் பிரித்து தரக்கோரிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.வஎண்.48/2018 என்றவழக்கை ராம்குமார் என்பவர் என்மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பிரிக்காத நிலையில் பிரித்ததுபோல் என் கணவர் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் செல்லாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் பிள்ளைகளுக்கு சொத்தை பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, ஞானம் என்பவருக்கு 1 ஏக்கர் பிரித்து கொடுத்தார். வழக்கு சொத்து பூர்வீக சொத்து அல்ல என்றும், எனக்கு அதில் உரிமையில்லை என்றும், உண்மைக்கு மாறாக கட்சி செய்து வருகிறேன் என்றால்சரியல்ல. என்னுடைய ஜுவனத்திற்கு என்ன செய்கிறேன் என்றால் 100 நான் வேலை பார்க்கிறேன். வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.